# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| Calendar | : **Case No.555/2014** |
| Miscellaneous | : |
| Summary Trial | : |
| Maintenance | : |
| Deposition of witness for prosecution | : **P.W.6.சண்முகத்தாய்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**01.08.2018**

**மு.வி:**

நான் எழுமலை பழைய அரண்மனை தெருவில் குடியிருந்து வருகிறேன். நாங்கள் பூ கடை வைத்திருக்கிறோம். அ.சா.1 என்னுடைய தம்பியின் மனைவி. 03.02.2014 ஆம் தேதி அ.சா.1 மாலை 4.30 மணி அளவில் என்னுடைய கடைக்கு அழுதுகொண்டே வந்தார். நான் என் அழுகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் மதிய வேலையில் அவருடைய குழந்தையை குளிக்கவைத்துக்கொண்டிருந்தபோது எதிரி அவருடைய செயின், மோதிரம், தொங்கு கம்மல், சாதாரண கம்மல் ஆகியவைகள் மொத்தம் 12.5 பவுன் எடுத்துபோய்விட்டதாக சொன்னார். அ.சா.1 நகைகளை பீரோவில் வைத்திருந்ததை எதிரி அவருக்கு தெரியாமல் எடுத்துவிட்டு போய்விட்டதாக சொன்னார். என்னுடைய தம்பி அ.சா.2 வந்தவுடன் விசாரித்து பார்த்து அதன்பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று அ.சா.1 மற்றும் நாங்கள் அனைவரும் சேர்ந்து புகார் கொடுத்தோம். அதன்பின்னர் நகைகளை போலீசார் மீட்டிக்கொடுத்தார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து அ.சா.1 பெற்றுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

சம்பவத்தன்று எனது தம்பி தேனிக்கு விசேஷத்திற்கு சென்றிருந்தார். எனது தம்பி 3 மணிக்கு வந்தார். வசந்தியை சம்பவத்திற்கு முன்பும் பின்பும் பார்த்ததில்லை என்றால் சரிதான். எனது தம்பி பூக்கடை எனது கடைக்கு அருகில் வைத்துள்ளார். வசந்தி எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தம்பி மனைவிக்கும் வசந்திக்கும் ரத்த சம்மந்தமான உறவு இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் எனது தம்பி வந்தவுடன் 3 மணிக்கு புகார் கொடுத்திருப்பீர்களா என்றால் 4 லிருந்து 4.45 மணி இருக்கும்.

எனது தம்பி புகாரை எழுத்து மூலமாக கொடுத்தாரா அல்லது வாய்மொழியாக கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் சம்பவம் நடந்த அன்றே என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. எனது தம்பி வீட்டிலிருந்த எந்த நகையும் திருட்டுபோகவில்லை என்றும் எனது தம்பி மனைவி பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தம்பி மனைவி என்ன என்ன வகையான நகைகள் வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ம.வி:

இல்லை.